# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## மறைமலைநகரில் இன்று உரையாற்றுகிறார்!



தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், மூன்றாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 6-ஆம் தேதி புதுச்சேரியில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைமலைநகரில் இன்று உரையாற்றுகிறார்.

### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| 09.04.2026 (வியாழக்கிழமை) | | |
| மாலை 5 மணி | மறைமலை நகர் (பொதுக்கூட்டம்) | செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர், மதுராந்தகம், உத்திரமேரூர், தாம்பரம், பல்லாவரம், மதுரவாயல், அம்பத்தூர், ஆலந்தூர், திருபெரும்புதூர், காஞ்சிபுரம் |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட் டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18
நாள் : 05.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் லதா பாலு அறிமுகம் செய்யும் மாபெரும் கூட்டம் அரியலூரில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு அரியலூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லதாபாலுவை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார். இதல் தி.மு.க. – கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மாநில இளைஞர் அணி துணை செயலாளர், வேட்பாளர் சீனிவாசனை ஆதரித்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. வேப்பனஹள்ளி ஒன்றியத்துக்கு உட்பட்ட மாதேப்பட்டி, மாரசந்திரம், நெடுமருதி, திப்பனப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு ஊராட்சிகளில் சுமார் 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார். இந்தப் பிரச்சாரத்தின் போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், துணை செயலாளர் சின்னசாமி, ஒன்றிய செயலாளர்கள் ரகுநாத், கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயராமன், மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் முருகேசன் , இலக்கிய அணி ராஜசேகரன் உள்ளிட்ட நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ஆறாவது முறையாக

## மாநிலங்களவை உறுப்பினராக திருச்சி சிவா பொறுப்பேற்றார்!

### ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் – எம்.கிறிஸ்டோபர் திலக் – எல்.கே.சுதீஷ் ஆகியோரும் பொறுப்பேற்றனர்!






புதுடெல்லி, ஏப். 9 - புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு பதவி யேற்பு நிகழ்ச்சியானது நாடாளு மன்றத்தில் நடந்தது.

அதில் தமிழ்நாட்டில் ஆறு இடங்களுக்கு போட்டி யின்றி எம்.பி.க்கள் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

இதில் ஆறாவது முறை யாக திருச்சி சிவா (தி.மு.க.) எம்.பி. பொறுப்பேற்றுக் கொண்டார்.

மேலும் ஜே.கான்ஸ்டன் டைன் ரவீந்திரன் (தி.மு.க.), எம்.கிறிஸ்டோபர் திலக் (காங்கிரஸ்), எல்.கே. சுதீஷ் (தே.மு.தி.க.) ஆகி யோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவி யேற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலை வருமான சி.பி. ராதா கிருஷ்ணன் பதவி பிரமா ணம் செய்து வைத்தார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் சு.முத்துசாமி சூரம்பட்டி பகுதி 31 வது வார்டில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், கழக மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வார்டு மற்றும் சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பங்கேற்றனர்.